சின்னச் சின்னதாய்...

கிருஷ்ணகிரியில் 9 வார்டுகளுக்கு உட்பட்ட பகுதியில் ரூ.1.07 கோடி மதிப்பில் திட்டப் பணிகள் தொடக்கம்

● கிருஷ்ணகிரி

கிருஷ்ணகிரியில் 9 வார்டுகளுக்கு உட்பட்ட பகுதியில் ரூ.1.07 கோடி மதிப்பிலான திட்டப் பணிகள் தொடக்க விழா கோ ஆபரேட்டிவ் காலனி, பாரதி நகர் , மேற்கு மாட தெரு உள்ளிட்ட பகுதிகளில் நடந்தது.

விழாவுக்கு, நகராட்சித் தலைவர் பரிதா நவாப் தலைமை வகித்தார். திட்டப் பணிகளை எம்எல்ஏ மதியழகன் தொடங்கி வைத்துப் பேசும்போது, "கிருஷ்ணகிரி நகராட்சியில் 9 வார்டுகளில் இன்று தார் சாலை, சிமெண்ட் சாலை, சிறுபாலம், கழிவுநீர் கால்வாய் உள்ளிட்ட பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. வரும் வாரத்தில் மீதமுள்ள வார்டுகளிலும் வளர்ச்சித் திட்டப் பணிகள் தொடங்கப்படும்" என்றார்.

நகராட்சி துணைத் தலைவர் சாவித்திரி கடலரசு மூர்த்தி, நகராட்சி ஆணையர் ஸ்டான்லி பாபு, சுகாதார அலுவலர் ராமகிருஷ்ணன், கவுன்சிலர்கள் சுதா சந்தோஷ்குமார், ஜெயக்குமார், ஆயிஷா, பாலாஜி, சீனிவாசன், மதன்ராஜ், வேலுமணி, ஹேமாவதி பரந்தாமன், மத்தின், புவனேஸ்வரி, தேன்மொழி, முகம்மது ஆசிப் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

↑ கிருஷ்ணகிரி நகராட்சிக்கு உட்பட்ட 9 வார்டுகளில் ரூ.1.07 கோடி மதிப்பில் புதிய திட்ட பணிகளை எம்எல்ஏ மதியழகன் தொடங்கி வைத்தார். உடன் நகராட்சித் தலைவர் பரிதா நவாப் உள்ளிட்டோர்.

நடிகை குஷ்புவைக் கண்டித்து கிருஷ்ணகிரியில் திமுக மகளிரணி ஆர்ப்பாட்டம்

● கிருஷ்ணகிரி

மகளிர் உரிமைத் தொகை திட்டம் குறித்து சர்ச்சைக்குரிய வார்த்தைகளில் பேசிய தேசிய மகளிர் ஆணைய உறுப்பினரும், பாஜக நிர்வாகியுமான நடிகை குஷ்புவைக் கண்டித்து, கிருஷ்ணகிரியில் திமுக மகளிரணி சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஆர்ப்பாட்டத்துக்கு, நகராட்சித் தலைவர் பரிதா நவாப் தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் நடிகை குஷ்புக்கு எதிராக முழக்கமிட்டனர்.

நகராட்சி துணைத் தலைவர் சாவித்திரி கடலரசு மூர்த்தி, திமுக மகளிரணி மாவட்ட அமைப்பாளர் லட்சுமி பிரியா, மகளிர் தொண்டரணி மாவட்ட அமைப்பாளர் புஷ்பா , மகளிர் அணி துணை அமைப்பாளர் கீதா , தகவல் தொழில்நுட்ப அணி மணிமொழி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

↑ மகளிர் உரிமைத் தொகை திட்டம் குறித்து சர்ச்சைக்குரிய வார்த்தைகளில் பேசிய நடிகை குஷ்புவைக் கண்டித்து, கிருஷ்ண கிரியில் திமுக மகளிரணி சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

கிருஷ்ணகிரி அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் ஆண்டுவிழா, விளையாட்டுப் போட்டி

● கிருஷ்ணகிரி

கிருஷ்ணகிரி அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் ஆண்டு விழா மற்றும் விளையாட்டுப் போட்டி நேற்று நடந்தது.

விழாவுக்கு, கல்லூரி முதல்வர் சாரதா தலைமை வகித்தார். சிறப்பு அழைப்பாளர்களாக பர்கூர் அரசு பொறியியல் கல்லூரி உதவி பேராசிரியர் கார்த்திகேயன், மருத்துவர் கேசவன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். இதையொட்டி நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்குக் கேடயம் மற்றும் கோப்பைகள் வழங்கப்பட்டன.

மேலும், நாட்டாண்மை கொட்டாய் அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியை மணிமேகலை, மாணவர்களுக்கு மஞ்சப்பை வழங்கி பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்து பேசினார்.

கோடை காலம் தொடங்கியுள்ள நிலையில்

மின்சாரம், குடிநீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்

● பொதுமக்களுக்கு கிருஷ்ணகிரி ஆட்சியர் அறிவுறுத்தல்

● கிருஷ்ணகிரி

கோடை காலம் தொடங்கியுள்ள நிலையில், மின்சாரம் மற்றும் குடிநீரைப் பொதுமக்கள் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தியுள்ளார்.

சூளகிரி அருகே செம்பரசனப்பள்ளி கிராமத்தில் மக்கள் தொடர்புத் திட்ட முகாம் நடந்தது. முகாமுக்கு, ஆட்சியர் கே.எம்.சரயு தலைமை வகித்து, 113 பயனாளிகளுக்கு ரூ.13 லட்சத்து 63 ஆயிரத்து 708 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கிப் பேசியதாவது:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மழை பொழிவு குறைந்துள்ளதால், எதிர்வரும் இரு மாதங்களுக்கு வறட்சி ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, குடிநீர் தட்டுப்பாடு உள்ள இடங்களைக் கண்டறிந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகக் கூடுதலாக ஆழ்துளைக் கிணறுகள், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள், குடிநீர் குழாய்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

எனவே, பொதுமக்கள் குடிநீரை வீணடிக்காமல் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். இதேபோல, ஒருசில இடங்களில் பொது குடிநீர் குழாயைத் திறந்து வைத்து நீரை வீணடிப்பதையும் பொதுமக்கள் தடுக்க வேண்டும்.

இதேபோல் கோடை காலம் தொடங்கி உள்ள நிலையில் வீடுகளில் குளிர் சாதனம், மின் விசிறியை அதிகம் பயன்படுத்துவதால் கூடுதல் மின்சாரம் தேவை ஏற்பட்டுள்ளது. எனவே, தேவையில்லாத நேரங்களில் மின்சாரத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்த்து, சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்.

எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் பொதுமக்கள் அனைவரும் தங்களது வாக்குரிமையை தவறாமல் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வாக்காளர் பட்டியலில் தங்களது பெயரைச் சரி பார்த்துக் கொள்ள வேண்டும். வாக்காளர் அடையாள அட்டை இல்லாதவர்கள் இணையதளம் வாயிலாகப் படிவம் - 8 பூர்த்தி செய்து வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம். மேலும், பொதுமக்கள் வாக்குக்காகப் பணம் மற்றும் பரிசுப் பொருட்களை பெறக் கூடாது. இவ்வாறு அவர் பேசினார்.

சமூக பாதுகாப்புத் திட்ட தனித் துணை ஆட்சியர் பன்னீர்செல்வம், நிலஅளவை உதவி இயக்குநர் சேகரன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் பத்மலதா, மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் முருகேசன், மாவட்ட வழங்கல் அலுவலர் கீதாராணி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

↑ சூளகிரி அருகே செம்பரசனப்பள்ளியில் நடந்த மக்கள் தொடர்பு திட்ட முகாமில், பெண்ணுக்கு நலத்திட்ட உதவியை, ஆட்சியர் கே.எம்.சரயு வழங்கினார்.

மனைவியை கொலை செய்த கணவர் காவல் நிலையத்தில் சரண்

● தருமபுரி

தருமபுரி மாவட்டம் இண்டூர் அருகே மனைவியை கொலை செய்த கணவர் போலீஸில் சரணடைந்தார்.

இண்டூர் அருகே அதகப்பாடி கிராமத்தைச் சேர்ந்த தொழிலாளி ராஜமாணிக்கம் (40). இவர் மனைவி சித்ரா (35). இந்த தம்பதிக்கு 1 மகன், 2 மகள்கள் உள்ளனர். இந்நிலையில் தம்பதிக்கு இடையே அடிக்கடி குடும்பத் தகராறு ஏற்பட்டு வந்தது. நேற்றும் இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது.

அதன்பின்னர், வெளியே சென்றுவிட்டு வீடு திரும்பிய ராஜமாணிக்கம், வீட்டருகே தூங்கிக் கொண்டிருந்த சித்ரா மீது கல்லைத் தூக்கிப் போட்டுவிட்டு தப்பியோடியுள்ளார். இதில், பலத்த காயமடைந்த சித்ரா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

தகவல் அறிந்த பென்னாகரம் டிஎஸ்பி மகாலட்சுமி தலைமையிலான போலீஸார் நேரில் சென்று விசாரணை மேற்கொண்டனர்.

பின்னர் சித்ராவின் உடல் பிரேத பரிசோதனைக்காக தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதற்கிடையில், தலைமறைவான ராஜமாணிக்கம் இண்டூர் காவல் நிலையத்தில் சரணடைந்தார். அவரை போலீஸார் கைது செய்து சிறைக்கு அனுப்பினர்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
குறுகிய கால ஒப்பந்தப் புள்ளி அழைப்பு (ஐ.எப்.பி) – (இரண்டு உறை) – இணம் வாரியாக மின்னணு ஒப்பந்தம் முறையில்

ஒப்பந்தப்புள்ளி கேட்பு எண்.	எண். 41,42,45,46 / கோ. வெள்ளசேதும் /வஆ2 / ஒ பி / 2024 / நாள். 12 .03.2024
ஒப்பந்தக்காரர் தகுதி	முதல் வகுப்பு ஒப்பந்தக்காரர்கள் (சிவில்)
ஒப்பந்தப் புள்ளி வரவேற்பவர்	தலைமைப் பொறியாளர், த.கு.வ.வா, மதுரை, தமிழ்நாடு
ஒப்பந்தப்புள்ளி படிவம் பதிவிறக்கம்	15.03.2024 முதல் 21.03.2024 ,15.00 மணி வரை
ஒப்பந்தபுள்ளி முன் வைப்புத்தொகை	Online முறையில் இணையதளம் "https://tntenders.gov.in" மூலமாக
ஒப்பந்தப்புள்ளி முன் ஆய்வுக்கூட்டம்	18.03.2024 அன்று முற்பகல் 11.00 மணிக்கு தலைமைப் பொறியாளர் அலுவலகம், த.கு.வ.வா, மதுரை.
ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல்	21.03.2024 அன்று 15.00 மணிக்குள் மின்னணு ஒப்பந்தம் முறையில் டிஜிட்டல் ஒப்பம் இடப்பட்டு இணையதளம் "https://tntenders.gov.in" மூலமாக
ஒப்பந்தப்புள்ளி திறப்பு	22.03.2024 அன்று 15.30 மணிக்கு மின்னணு ஒப்பந்தம் முறையில்

ஒ. கே. எண்	திட்டத்தின் பெயர்	உத்தேச மதிப்பு (ச.ம.சே.வரி 18 % உட்பட) (ரூ. கோடி)	முன்வைப்பு தொகை (ரூ. இலட்சம்)
வடகிழக்கு பருவ மழை காரணமாக தாமிரபரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கின் போது ஏற்பட்ட சேதங்களை நிரந்தரமாக சீரமைக்கும் பணிகள்– தெரிவு நிதி – ஜல் ஜீவன் திட்டம்– திருநெல்வேலி மாவட்டம்			
41	மானூர் மற்றும் 407 ஊராக்க குடியிருப்புகளுக்கான கூ.குதி.	6.31	4.75
42	1)களாமியாங் பாதிக்கப்பட்டுள்ள 113 ஊராக்குடியிருப்புகள், 2)பணகுடி – வடக்கு வள்ளியூர் பேரூராட்சி மற்றும் 168 வழியோர குடியிருப்பு கூ.குதி.	3.80	2.85
45	நாங்குநேரி–திசையன்விளை கூ.குதி.	4.85	3.65
46	1)20 ஊ.கு 2)பொன்னகுடி 3) மூலக்கரைப்பட்டி பேரூராட்சி 4)நரசிங்கநல்லூர் 5) 15 ஊ.கு 6)34 ஊ.கு 7)எங்கர்நகர் 8)பர்கித்மாநகர் 9) 183 குடியிருப்புகள் 10) கூடங்குளம் 11)ராங்கரன் கோவில் 12)சேந்தமங்கலம் 13)ரெட்டியார்பட்டி 14)பிரம்மதேசம் கூ.குதி.	3.96	3.00

செ.ம.தொ.இ/ 1614 /ஒப்பந்தப்புள்ளி/2024 தேவை இத்தருணம் – குடிநீர் சிக்கனம் தலைமைப் பொறியாளர், தகுவவா, மதுரை.

அனைத்துக் கட்சி பிரதிநிதிகளுடன் ஆட்சியர் தலைமையில் ஆலோசனைக் கூட்டம்

● தருமபுரி

தருமபுரி மாவட்டத்தில் துணை வாக்குச் சாவடி நிலையங்களை கண்டறிதல் மற்றும் வேட்பாளர்களின் செலவினங்களின் விலைப்பட்டியல் நிர்ணயம் தொடர்பாக கட்சி பிரதிநிதி களுடனான ஆலோசனைக் கூட்டம் ஆட்சியர் தலைமையில் நடந்தது.

தருமபுரி ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடந்த இந்தக் கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் சாந்தி தலைமை வகித்தார். அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரதிநிதிகளுடனான இந்த ஆலோசனைக் கூட்டத்துக்கு பின்னர் ஆட்சியர் கூறியது:

ஒரே வாக்குச் சாவடி நிலையத்தில் 1,500-க்கும் மேற்பட்ட வாக்காளர்கள் இருந்தால், அந்த வாக்குச் சாவடிகளை கண்டறிந்து துணை வாக்குச் சாவடிகளை உருவாக்க வேண்டும் என இந்திய தேர்தல் ஆணையம் ஆணையிட்டுள்ளது. இதுகுறித்து, களஆய்வு மேற்கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்கள், வருவாய் கோட்ட அலுவலர்களிடம் இருந்து முன்மொழிவுகள் பெறப்பட்டது. இந்தப் பொருள் குறித்து அனைத்துக் கட்சி பிரமுகர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடந்தது.

கூட்டத்தில், வாக்குச் சாவடி நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. தருமபுரி மாவட்டத்தில் 1,500-க்கும் மேல் வாக்காளர்கள் உள்ள வாக்குச் சாவடி நிலையங்கள் எதுவும் இல்லை என்பதால் புதிதாக துணை வாக்குச் சாவடி நிலையங்கள் எதுவும் உருவாக்கப்படவில்லை.

மாவட்டத்தில் உள்ள 1,489 வாக்குச் சாவடிகளில் 24 வாக்குச் சாவடிகளின் கட்டிடங்கள் பழுதான காரணத்தால் இச்சாவடிகள் வேறு கட்டிடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன. மேலும், வரவிருக்கும் மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மேற்கொள்ளும் அன்றாட செலவினம் தொடர்பான விலைப்பட்டியல் குறித்தும் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

இந்தக் கூட்டத்தில், தருமபுரி கோட்டாட்சியர் (பொ) சையது மொகதின் இப்ராகின், அரூர் கோட்டாட்சியர் வில்சன் ராசசேகர், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) பிரகாசம், (கணக்கு) அருண்மொழிதேவன், வட்டாரப் போக்குவரத்து அலுவலர் தாமோதரன், தனி வட்டாட்சியர் (தேர்தல்) அசோக்குமார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

↑ தமிழக அரசின் நலத்திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்து ஒருவார காலம் நடைபெறும் வகையில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் தருமபுரி வள்ளலார் திடலில் அமைக்கப்பட்டுள்ள புகைப்படக் கண்காட்சியை மாவட்ட ஆட்சியர் சாந்தி நேற்று மாலை தொடங்கி வைத்து பார்வையிட்டார். உடன், முன்னாள் எம்எல்ஏ தடங்கம் சுப்பிரமணி உள்ளிட்டோர்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
குறுகிய கால ஒப்பந்தப் புள்ளி அழைப்பு (ஐ.எப்.பி) – (இரண்டு உறை) – இணம் வாரியாக மின்னணு ஒப்பந்தம் முறையில்

ஒப்பந்தப்புள்ளி கேட்பு எண்.	எண். 43 – 44 /கோ. வெள்ளசேதும் /வஆ2 / ஒ பி / 2024 / நாள். 12.03.2024
நிதி	நெகிழ்வு நிதி – ஜல் ஜீவன் திட்டம்
ஒப்பந்தக்காரர் தகுதி	முதல் வகுப்பு ஒப்பந்தக்காரர்கள் (சிவில்)
ஒப்பந்தப் புள்ளி வரவேற்பவர்	தலைமைப் பொறியாளர், த.கு.வ.வா, மதுரை, தமிழ்நாடு
ஒப்பந்தப்புள்ளி படிவம் பதிவிறக்கம்	19.03.2024 முதல் 03.04.2024 15.00 மணி வரை
ஒப்பந்தபுள்ளி முன் வைப்புத்தொகை	Online முறையில் இணையதளம் "https://tntenders.gov.in" மூலமாக
ஒப்பந்தப்புள்ளி முன் ஆய்வுக்கூட்டம்	25.03.2024 அன்று முற்பகல் 11–00 மணிக்கு தலைமைப் பொறியாளர் அலுவலகம், த.கு.வ.வா, மதுரை.
ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல்	03.04.2024 அன்று 15.00 மணிக்குள் மின்னணு ஒப்பந்தம் முறையில் டிஜிட்டல் ஒப்பம் இடப்பட்டு இணையதளம் "https://tntenders.gov.in" மூலமாக
ஒப்பந்தப்புள்ளி திறப்பு	04.04.2024 அன்று 15.30 மணிக்கு த. கு. வ. வாரியம், தலைமைப் பொறியாளர் அலுவலகம், மதுரை மின்னணு ஒப்பந்தம் முறையில்

ஒ. கே. எண்	திட்டத்தின் பெயர்	பணியின் உத்தேச மதிப்பு (ச.ம.சே.வரி 18 % உட்பட) (ரூ. கோடி)	(முன்வைப்பு தொகை (ரூ. இலட்சம்)
வடகிழக்கு பருவ மழை காரணமாக தாமிரபரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கின் போது ஏற்பட்ட சேதங்களை நிரந்தரமாக சீரமைக்கும் பணிகள்			
43	தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள கயத்தாறு, கழுகுமலை, எட்டயபுரம் பேரூராட்சிகள் மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள சாத்தூர் நகராட்சி மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 161 வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர்த்திட்டங்கள்	14.38	10.80
44	விருதுநகர் மாவட்டத்தில் உள்ள அருப்புக்கோட்டை, சுரியாபட்டி, விருதுநகர் (பகுதி) திருச்சுழி மற்றும் நரிக்குடி ஒன்றியங்களுக்குட்பட்ட 637 ஊரகக்குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர் த்திட்டங்கள்	11.53	8.65

செ.ம.தொ.இ/ 1583 /ஒப்பந்தப்புள்ளி / 2024 தேவை இத்தருணம் – குடிநீர் சிக்கனம் தலைமைப் பொறியாளர், தகுவவாரியம், மதுரை

தமிழ்நாடு அரசு
சேலம் மாநகராட்சி

ந.க.எண்.இ2 / 14447 / 2023 நாள்: 13.03.2024

மூலதன மான்ய நிதி

மின்னனு மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இரட்டை உறை முறை)

1. சேலம் மாநகராட்சியின் சூரமங்கலம் மண்டலம் எண்–1, அஸ்தம்பட்டி மண்டலம், எண்–2, அம்மாப்பேட்டை மண்டலம் எண்–3, கொண்டலாம்பட்டி மண்டலம் எண்–4, ஆகிய பகுதிகளில் உள்ள OHT நீர் நிலை மற்றும் அழுத்தம் ஆகியவற்றை சேகரிப்பதற்காக IOT நெட்வொர்க் உள்கட்டமைப்பை நிறுவுதல் மற்றும் செயல்படுத்தும் பணி மதிப்பீடு தொகை ரூ. 4.29 கோடி.
2. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் மற்றும் விபரங்கள் www.tntenders.gov.in என்ற இணையதளத்தில் இருந்து இலவசமாக 14.03.2024 முதல் 02.04.2024 வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
3. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் – 14.03.2024 முதல் 02.04.2024 மாலை 3.00 மணி வரை
   ஒப்பந்தப்புள்ளி திறப்பு – 02.04.2024 மாலை 3.30 மணி

ஆணையாளர், சேலம் மாநகராட்சி.

செ.ம.தொ.இ./1590/ஒப்பந்தப்புள்ளி/2024

GREATER CHENNAI CORPORATION
ELECTRICAL DEPARTMENT - IT CELL

I.T.C.C.No.C1/4590/2023

e-TENDER NOTICE

e-tenders are invited for the following work by S.E (Electrical) in Two Cover System as per details furnished below

Installation and Monitoring with Maintenance of 289 Nos. of On-line vehicle tracking system using GPS/GIS units for conservancy vehicles on hire basis for a period of 3 years

Value of Work in Rs.1,31,29,224/- | E.M.D Amount in Rs. 1,31,292/-

Bid document will be available in web site https://tntenders.gov.in

Last date and time to submit the filled in tender document: 27 - 03 - 2024 upto 03.00 P.M

Tender opening date and time: 28 - 03 - 2024 at 03.15 P.M

Pre-bid Meeting Date & Time: 22 - 03 - 2024 at 04.00PM, Smart Governance Centre, Green Building, 3rd floor, IT Wing, Ripon Building Complex, Greater Chennai Corporation, Ch - 03.

DIPR / 1589 / TENDER / 2024 Superintending Engineer (Electrical)

வரி விளம்பரங்கள்

கல்வி

பயிற்சி வகுப்புகள்

BANK PO/CLERK Exam Coaching March-21 (8.30am- 10am) for IBPS SBI - RRB - RBI. -CSB- Near Mambalam Railway Station. Call: 93813 33346

பிறசேவை பகுதி

அறிவிப்பு

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS
C.P. No. 254 of 2012

Anjani Associates
76, Perundurai road, 2nd Floor, Upper of Easybuy showroom, Collectorate Bus Stop, Erode-638011 ...Petitioner
Vs
Dhandapani Spinning Mills Ltd., Registered Office : 17F, Rajaji Road, Salem-636007
...Respondent

The above Company Petition in C.P 254 of 2012 came up before the Hon'ble High Court on 08.03.2024 wherein the Hon'ble Court has in pursuance to the order dt. 07.08.2023 in OSA No.75 of 2014 of the Hon'ble Division Bench, has admitted the said Company petition and has ordered paper publication in the above matter and posted the matter after 4 weeks.

Hence the above Company Petition will be listed before this Hon'ble Court for hearing on 05.04.2024. Therefore, kindly be present in the court on the said date or the matter will be proceeded in your absence on merits.

Dated at Chennai on this the 11th day of March 2024
Counsel for Petitioner

கூட்டுறவு வங்கியின் நடமாடும் சேவை தொடக்கம்

● கிருஷ்ணகிரி

கிருஷ்ணகிரியில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் நடமாடும் வங்கிசேவை தொடங்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி சார்பில், நபார்டு வங்கி நிதியுதவியுடன் ரூ.15 லட்சம் மதிப்பில், நடமாடும் வங்கி சேவைக்கான வாகனத்தை ஆட்சியர் கே.எம்.சரயு கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

இதுதொடர்பாக வங்கி அதிகாரிகள் கூறியதாவது:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செயல்படும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கிளைகள் மற்றும் அவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் வாடிக்கையாளர்களிடம் நேரடியாக அவர்களின் வசிப்பிடத்துக்குச் சென்று வங்கி சேவை மூலம் பணம் வழங்க வசதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், இதர வங்கிக் கணக்கு உள்ளவர்களும், ஏடிஎம் டெபிட் கார்டு மூலமாக பயோ மெட்ரிக் முறையில் பணம் எடுக்கலாம். பணம் அனுப்பலாம்.இவ்வாறு அவர்கள் கூறினர்.தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி செயலாட்சியர் மலர்விழி, கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் ஏகாம்பரம், நபார்டு வங்கி மாவட்ட மேலாளர் நர்மதா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அமைப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

↑ தருமபுரி மாவட்டம் அரூர் 4 ரோடு பகுதியில் எம்.பி நிதியில் ரூ.16 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள குளிர்சாதன வசதியுடன் கூடிய நவீன நிழற்கூடம் அமைக்கும் பணியை தருமபுரி எம்.பி டி.என்.வி.செந்தில்குமார் நேற்று தொடங்கி வைத்தார்.

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்
(ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)

பதிவு அலுவலகம்: தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071.

மின்-ஏலம் அறிவிப்பு

2002-ம் ஆண்டு (SARFAESI ACT) கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டத்தின் அமலாக்கம் மற்றும் 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) பாதுகாப்பு வட்டி விதிகள் 8(6) மற்றும் 9-ன் கீழ் மின்-ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பு.

கீழே கையொப்பமிட்ட **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் SARFAESI சட்டம் பிரிவு 13(4)ன் கீழ், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை தனது சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டார். இதன் மூலம் கடன்தாரர் குறிப்பாகவும், பொது மக்களுக்கும் அறிவிப்பதாவது, கீழ்க்கண்ட நபர்களிடமிருந்து, வங்கிக்கு செலுத்தவேண்டிய கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்குறிப்பிட்ட கணக்குகளின் அடமான சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு"** எனும் அடிப்படையில் **மின் ஏலத்தின் (e-auction)** மூலம் விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி கீழ்குறிப்பிட்ட நாட்களில் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்.	கடன் கணக்கு எண்.	உண்மையான கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	13-2 அறிவிப்பு நாள்	சுவாதீன நாள்	11.03.2024-ன்படி தற்போதைய நிலுவை தொகை	சொத்தினை பார்வையிடும் நான் & நேரம்	ரிசர்வ் தொகை INR-ல்	முன்வைப்பு தொகை (EMD) INR-ல்	மின்-ஏலம் நாள் மற்றும் நேரம்	ஏலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள், நேரம் மற்றும் இடம்
1	31688653213883	1) M/s. Manjunatha Tent House, 2) திரு. V மஞ்சுநாதா, உரிமையாளர் M/s. Manjunatha Tent House, 3) திரு. V வெங்கட்சுவாமி	20.02.2020	23.09.2021	ரூ.14,23,625.05 (ரூபாய் பதிநான்கு இலட்சத்து இருபத்தி மூன்றாயிரத்து அறுநூற்றி இருபத்தி ஐந்து மற்றும் பைசா ஐந்து மட்டும்)	21.03.2024 நேரம் : காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை	ரூ.10,70,000/- (ரூபாய் பத்து இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்)	ரூ.1,07,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து ஏழாயிரம் மட்டும்)	30.03.2024 @ மாலை 02.00 மணி	28.03.2024, மாலை 5.00 மணிவரை, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், தலைமை அலுவலகம்: தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071.

அடமான சொத்துக்கள் விவரம்: அசையா சொத்து மற்றும் அதன் அனைத்து பகுதிகளும், மதிகிரி கிராமம், ஓசூர் தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம் மற்றும் கேளமங்களம் சார்-பதிவு மாவட்டம், மதிகிரி கிராமம், சர்வே எண். 162 (நூற்றி அறுபத்தி இரண்டு), வறண்ட பரப்பு ஹெக். 0.96.0, அசெட் ரூ.4.74, இதில் நிலம் வீட்டு மனைகளாக மாற்றப்பட்டது, இதில் ம